[1975 நவம்பர் 5

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இந்த ஆண்டே விரைவாகக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

*204. வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்**: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கட்டப்பட்டு வரும் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 500 வசூலிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை எதற்காக வசூலிக்கப்பட்டது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, முன்னால் தொகை வசூலிக்கப்பட்டது. அத்தொகை திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்து விட்டது. ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சியாளர்கள் அந்தந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு உள்ளது. சில மாவட்ட ஆட்சியாளர்கள் அந்தப் பணத்தை அவர்களுக்கு ஏதாவது தொழில் செய்ய பயன்படுத்தலாமா அல்லது திருப்பிக் கொடுத்து விடலாமா என்ற நிலையில் இருக்கிறார்கள். அந்த முடிவு சமீபத்தில் செய்யப்பட்ட முடிவு. அந்த முடிவு பற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மக்களும் அந்த வீட்டைப் பெறுவதற்காக ரூ. 500 கடன் வாங்கி கொடுத்திருக்கிறார்கள். இப்போது அந்தப் பணத்திற்கு மேலேயே வட்டி கட்ட வேண்டிய நிலையில் இருப்பதால் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுத்துவிடுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே, இந்தப் பணத்தை திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தாகி விட்டது.

1975 நவம்பர் 5]

Houses for repatriates from Burma

* THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that repatriates from Burma are provided with financial assistance by the Central Government to construct houses of their own in Madras City;

(b) if so, the extent of assistance rendered during the years 1972–73 and 1973–74; and

(c) the details of assistance rendered?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) ஆம்.

(இ) & (உ) பர்மா அகதிகள் சொந்த வீடுகள் கட்டிக் கொள்வதற்காக இந்திய அரசு மாநில அரசுக்கு அளிக்கும் நிதிகளி லிருந்து பர்மா அகதிகள் வீடு கட்டிக்கொள்வதற்குக் கடன் வழங்கப்படுகிறது. 1972–73-ல் 122 பர்மா அகதிகளுக்கு ரூ. 5,00,200 வீட்டு வசதிக் கடனுகை கொடுக்கப்பட்டது. 1973-74-ல் கடன் எதுவும் கொடுக்கப்படவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இதேமாதிரி சிலோனிலிருந்து வெளியேற்றப்பட்ட சிலோன் ரிபாட்ரியேட்ஸ்-க்கும் சலுகைகள் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இப்போது கேட்கப்பட்ட கேள்வி பர்மா அகதிகளைப் பற்றியது. சிலோன் அகதிகளுக்கும் இந்தமாதிரி திட்டம் உண்டா என்று கேட்டிருக்கிறார்கள். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்கலாம்.

திரு. எஸ். வடிவேல் : அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு மத்திய அரசு எத்தனை சதவீதம் கொடுக்கிறது ? மாநில அரசு எத்தனை சதவீதம் கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, மத்திய அரசு கொடுத்தாலும் மாநில அரசு கொடுத்தாலும் அந்தப் பணத்தைப் பிரித்துத் தருகிறோம். எவ்வளவு விகிதம் என்று இல்லை. மாநில அரசைக் கலந்து கொண்டு தான் மத்திய அரசு செய்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து இதுவரை 122 வீடுகள் மட்டுமே பர்மா அகதிகளுக்காக மத்திய அரசு நிதியிலிருந்து கட்டிக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் — தமிழர்கள் இப்படி பர்மா, சிலோன் போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக வருவதால், மத்திய அரசு நிதி குறைந்த அளவே கிடைக்கும் காரணத்தால், மாநில அரசு சார்பாக தொகை ஒதுக்கி, அந்த அகதிகள் நடுத் தெருவில் நிற்காமல் இருக்க வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : 122 வீடுகளுக்கு மட்டும் ஏற்கனவே மத்திய அரசு பணம் கொடுத்திருக்கிறது. கிட்டத் தட்ட 2,760 வீடுகள் கட்ட நாம் பணம் கேட்டதில் முதலில் 10,29,100 ரூபாயும் பின்னர் ரூ. 5,28,900-ம் கொடுத்திருக்கிறார்கள். தேவை ரூ. 2,38,84,000 ஆகும். இவ்வளவு தொகை வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டபோது அவர்கள் ஒரு ஆலோசனை கூறியிருக்கிறார்கள். நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தை அணுகுமாறு இந்திய அரசு மாநில அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கிறது. அந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டு இந்த மாநில அரசு 'ஹட்கோ' என்ற நிறுவனத்தை இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் பணம் வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அங்கிருந்து இன்னும் பதில் வரவில்லை. வந்தவுடன் விவரங்கள் அளிக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : அகதிகளுக்காக மத்திய அரசாங்கம் கொடுத்த பணம், அவர்களுக்கு வீடுகள் கட்டப் போதுமானவையாக இல்லை என்று சொன்னார்கள். அந்த அகதிகளுக்கு பர்மா, சிலோன் அரசாங்கங்கள் மூலம் வரும் பணம் மத்திய அரசாங்கத்தின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறதா ? அதன் பேரில் பேச்சு வார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: நேற்று இரவுதான் அந்த அகதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி விவரங்களை அறிந்தேன். பல்லாயிரக்கணக்கான அகதிகளைக் கேட்டபோது அவர்கள் 'நாங்கள் வாழ்ந்தபடியே விட்டிருந்தால் ஓரளவு நலமுடன் இருப்போம். ஆனால் நாங்கள் வாழ்ந்த வாழ்விலிருந்து, வெறும் ஆட்களாக அனுப்பி விட்டார்கள். ஆகவேதான் இந்த அரசாங்கத்தையும், மத்திய அரசாங்கத்தையும் உதவி கேட்கிறோம்' என்று கூறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அப்துல் ஜப்பார் அவர்களிடமும் கூறினார்கள். அவர்கள் சொன்னதிலிருந்து அவர்கள் வரும்போது எதையும் எடுத்துக் கொண்டு வரவில்லை என்பது தெளிவாகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தமிழகத்திலிருந்து பிழைக்க பர்மா, சிலோன் தேசங்களுக்குப் போனார்கள். அந்த அரசுகள் அவர்களுடைய சொத்துக்களைப் பறித்துக் கொண்டு அவர்களை வெறுமனமே அனுப்பியிருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டுவதற்காக மத்திய அரசு கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அந்தக் கோரிக்கை இப்போது வந்திருக்கிறது. கோரிக்கைகள் உண்மையா, நியாயமா, செய்ய வேண்டியதுதானா என்று அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. நேற்று இரவு கூட பல சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு அதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். முதலமைச்சரைக் கலந்து கொண்டு இந்திய அரசுக்கு எழுதலாம். இரண்டாயிரத்துக்கு உட்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்யலாம், ஐயாயிரம் கடன் பெற்றவர்களுக்குத் தள்ளுபடி செய்ய முடியாது என்ற நிலையில் அதுபற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். முதலமைச்சரைக் கலந்து கொண்டு சொல்லுகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அந்த யோசனை தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

[1975 நவம்பர் 5

திரு. த. சோணையா: பர்மாவில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தவர்கள் இங்கு வந்து ஆதரவற்ற நிலையில் ஆதரவு கேட்ட போது தமிழக அரசு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறது. வீடுகள் கட்டியிருக்கும் வீதிகளில் மின் விளக்கு இல்லாமல் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மின் விளக்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: நேற்று இரவு கூட மின் இணைப்புக் கொடுத்த விழாவிலேதான் கலந்து கொண்டு வந்திருக்கிறேன். பல்லாயிரக் கணக்கான அகதிகள் இருக்கின்ற இடத்திற்கு வெளிச்சம் இல்லை என்று கேட்டார்கள். இப்போது அரசு அவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்திருக்கிறது. வேறு எங்கு மின்சாரம் இல்லை என்றாலும் அதைப் பூர்த்தி செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பர்மா அகதிகள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவியைப் பெறுவதற்காக ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் வாரா வாரம் பார்த்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உதவிப் பணியை விரைவில் முடித்துத் தர மத்திய அரசிடம் அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: நேற்று இரவு கூட கோரிக்கைகளை—நம்முடைய பர்மா தமிழர்கள்—தமிழர்கள், பர்மாவுக்குச் சென்று வந்தவர்கள்—வைக்கின்ற கோரிக்கைகளை ஆங்காங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களுக்கு இருக்கிற அதிகாரத்திற்குட்பட்டு நிறைவேற்றுகிறார்கள். மத்திய அரசைக் கேட்டுச் செய்வதில் கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. நம்முடைய அரசைப் பொறுத்து நாமும் சில காரியங்களைச் செய்ய இப்போது முடிவெடுத்திருக்கிறோம். அவற்றைச் செய்தால் ஓரளவு கோரிக்கைகள் குறையும் என்று நினைக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்குக் கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டால் ஒரு நபருக்கு 10,000 ரூபாய் வரை மூலதனமாகக் கொடுப்பதாக மத்திய அரசு அறிவித்ததை நாம் எந்த அளவுக்குப் பயன்படுத்தியிருக்கிறோம்?

1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இப்படி நூற்பாலைகளில் வேலை செய்கிறவர்களுக்கு முதலீடாக 10,000 கொடுப்பது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தற்போது அதிக பட்சம் அந்த அகதிகளுக்கு தொழில் துறையில் முதலீடு செய்ய 5,000 ரூபாய் வரை அளிக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொன்ன விவரத்தை ஏற்றுக்கொண்டு அதுபற்றிய விவரங்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பதில் அளிக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நூற்பாலைகளுக்கு மத்திய அரசாங்கம் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பாலைகளில் ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர் போன்ற இடங்களில் இதை நாம் செயல்படுத்தி வருகிறோம்.

திரு. கு. காமாட்சி: ஒரு வீடு கட்ட குறைந்தது 4,000 ரூபாயாவது தேவைப்படுகிறது. ஆனால் இப்போது அகதிகளுக்காகக் கொடுக்கப்படுகிற ரூபாயில் நிலம் வாங்க சிறு தொகையைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்ட அனுமதிக்க வேண்டுமென்று கேட்கப்படுகிறது. இவர்களுக்கு 4,000 ரூபாயைக் கொடுக்காமல் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது போல் வீடு கட்டிக் கொடுக்கலாம். அவர்களுக்கு மேலும் 1,500 ரூபாய் வரை கொடுத்து கறவை மாடுகள் வாங்கி கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கு. காமாட்சி: அவர்களுக்கு வருமானம் வரத்தக்க அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அரிசனங்களுக்குச் செய்யும் அதே திட்டத்தைப் பர்மா அகதிகளுக்குச் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அவர்களுக்குக் கொடுக்கிற 6,000 ரூபாயில் மனை வாங்க 600 ரூபாய்; வீட்டு மனையாக மேம்படுத்த 1,800 ரூபாய்; வீடு கட்ட 3,600 ரூபாய் என்று பிரித்திருக்கிறார்கள். அது உண்மையில் சங்கடந்தான். அரிசனங்களுக்குச் செய்வது போல் பர்மா அகதிகளுக்குச்

செய்யலாம் என்று உறுப்பினர் அவர்கள் கருத்தைத் தெரிவிக்கிறார்கள். அதிலே கொள்கை மாறுபாடு வந்து விடுகிறது. பர்மா அகதிகளில் பல்வேறு சாதியினர், பல்வேறு இனத்தினர், பல்வேறு மதத்தினர் இருக்கிறார்கள். பர்மா அகதிகள் எந்த மதத்தினராக, இனத்தினராக, சாதியினராக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரி உதவி செய்ய வேண்டுமென்ற ஒரு கொள்கையை உருவாக்கி அவர்களுக்கு உதவி செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப்: இப்போது இலங்கை, பர்மா அகதிகளுக்கு உதவுவது போல் இன்னும் சைகோன், லாவோஸ் போன்ற நாடுகளில் இருந்து வருகிறவர்களுக்கும் உதவி செய்ய தனியான அடிப்படையை வைத்து அவர்களுக்கும் உதவி செய்யும் திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அங்கத்தினர் அவர்கள் எண்ணத்தை அரசு ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பர்மா அகதிகளுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் வேலை வாய்ப்பு அளிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள விதிமுறைப்படி ஒரு குடும்பத்தில் ஒருவருக்குத்தான் வேலை கொடுக்க வழி இருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டும் வேலை செய்தால் அவ்வளவு பேரையும் காப்பாற்ற முடியாது. ஆகவே, குடும்பத்தில் தகுதியுள்ளவர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இது மத்திய அரசாங்கம் போட்ட ஆணையின் அடிப்படையில் நடக்கிறது. ஒரு குடும்பத்திற்கு இருவருக்கு வேலை கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

1975 நவம்பர் 5]

[முற்பகல் 10.00]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

தூத்துக்குடி கடற்கரையிலிருந்து சென்ற சில மீனவர்கள் காணமல் போனதும், புயல்பற்றி எச்சரிக்கப்படாததும், மீனவரிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. எ. சுப்பிரமணியம், திரு. ஜேம்ஸ் ஆகிய மூவரும்

'missing of 7 fishermen who sailed in a mechanised fishing boat from Tuticorin Coast on 26th October 1975 and failure to give adequate warning regarding impending storm and unrest among fishermen in this area'.

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கக்கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இன்று இங்கு வைக்கூடிய நேரத்தில் அந்த ஏழு பேர்களும் இராமேஸ்வரம் கடற்கரையில் ஒதுங்கி, காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற நற்செய்தி வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குள்ள இரண்டு மூன்று காரணங்கள் என்னவென்றால் ஒன்று தூத்துக்குடி கடற்கரையிலிருந்து சென்ற ஏழு பேர்களும் ஒரு மெக்கானைஸ்ட் போட்டில் சென்றார்கள். அப்படி மெக்கானைஸ்ட் போட்டில் சென்றால் புயல் மற்றவைபற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்ற கருத்து அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிற காரணத்தால்தான் இவர்கள் சென்ற இரண்டு மணி நேரத்திற்குள் புயல் வந்து அதற்குப் பின்னல் செல்லக்கூடியவர்கள் எச்சரிக்கையாக இருந்தார்களே தவிர தூத்துக்குடி